ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஆ) தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நலநிதியத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2013

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நலநிதியத் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நலநிதியத் (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

5. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது மேலும் விவாதம். மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா, முனைவர் வைகைச்செல்வன் அவர்கள்.

முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வானம் தன் மேகச் சிறகை விரித்துப் பறக்க வட்டமிடுகிற வேளையில், பூமி தன் புன்னகையால் புலர்காலை விடுவிக்கின்ற பூபாளம் கடந்த நேரத்தில், வானம் முட்டி நிற்கிற கோபுரம், அதை தட்டிச் செல்கிற விண்மேகம், நம்மைத் தொட்டுச் செல்கிற காற்று, நம்மை பட்டுப் படர்ந்திருக்கும் வெளிச்சம், "கீ" "கீ" என்று பறவைகள் எழுப்பும் ஓசை என்று ஓர் இதமான சூழ்நிலையில், மகிழ்ச்சியும், ஆனந்தமும், செம்மையும், செழுமையும், உண்மையும், திண்மையும், நிறைந்ததாகக் கருதப்படுகிற வேளையில், வசந்தம் வீசும் ஒரு வசந்தகால தட்பவெட்ப நிலையில், திருவள்ளுவர் ஆண்டு, நந்தன வருடம், தைத் திங்கள் 19 ஆம் நாளில், பதினான்காவது சட்டமன்றப் பேரவையில் மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையின்மீது நடைபெறுகிற விவாதத்தில் கலந்துகொண்டு, கடமையாற்றுவதற்கு உயர்ந்ததொரு சந்தர்ப்பத்தை உருவாக்கித் தந்திருக்கிற தமிழகத்தின் தன்னிகரில்லாத முதலமைச்சர், தன் நேர் இல்லாத தலைவர், மின்னலைக் கொப்பளித்து மின்சாரத்தைத் துப்புகிற ஆற்றல், நெருப்பைப் பிழிந்தெடுத்த அக்கினிக் குஞ்சு, கக்கும் எரிமலையின் கீற்றாய் வந்த வரலாறு, மின்னல், இடி இடித்து பாட்டில் நுழைத்த பாரதம், வாக்கில் தேயாத நிலா, வரலாற்றில் நிரந்தரமாக உலாவும் உலா, மின்னலுக்கு வெப்பத்தையும், கண்ணலுக்குச் சத்தத்தையும், கனலுக்கு முத்தத்தையும் தந்தவர் எங்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் ஊனில், உணர்வில், உதிரத்தில், நாடி நரம்பில் கடந்திட்ட உயிரணையத் தலைவி அம்மா அவர்களுக்கு, எனது நெஞ்சார்ந்த நன்றியறிதலை அடக்கத்துடனும், பணிவுடனும் முன்வைக்கிறேன்.